திருச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளர் – அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி திருச்சி கிழக்கு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட முதலியார்சத்திரம், காஜா பேட்டை, ஆகிய பகுதிகளில் அமைந்துள்ள நியாய விலைக் கடைகளில் குடும்ப அட்டைதாரர்கள் பயன்பெறும் வகையில் ரூபாய் 3000 ரொக்கம் மற்றும் பொங்கல் பரிசு அடங்கிய பை மற்றும் ஒரு முழு நீள கரும்பினை பொதுமக்களுக்கு வழங்கினார்.. உடன் கழக நிவ்வாகிகள் கலந்து கொண்டனர்.

கரூர் மாவட்டத்தில்

ரூ.4500 கோடி மதிப்பீட்டில் உட்கட்டமைப்பு வசதிகள்!

வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. பேச்சு!

கரூர். ஜன.9-

கரூர் மாவட்டத்தில் ரூ.4500 கோடிமதிப்பீட்டில்அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளதுஎனகுடிநீர்திட்டவிநியோகம் தொடர்பான ஆலோசனைக் கூட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர் வி. செந்தில் பாலாஜி தெரிவித்தார்.

கரூர்மாவட்டத்தில்சீரானகுடிநீர் விநியோகம் மற்றும் தெருவிளக்கு பராமரிப்பு தொடர்பான அரசு அலுவலர்களுடனான ஆலோசனைக் கூட்டம் கரூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில்நடைபெற்றது.கரூர்சட்டமன்ற உறுப்பினர் வி செந்தில் பாலாஜி தலைமைவகித்தார். ஆட்சியர்மீ.தங்கவேல் முன்னிலை வகித்தார்.

வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ- பேசியதாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பொதுமக்களுக்குசீரானகுடிநீர்வழங்குவதை உறுதிசெய்வதைதொடர்ந்துகண்காணித்திட அறிவுறுத்தியுள்ளார்கள். அந்தவகையில் கரூர் மாவட்டத்தில் சீரான குடிநீர் விநியோகம். தெருவிளக்கு பராமரிப்பு மற்றும் நகர்ப்புற தூய்மை தொடர்பாக அலுவலர்களுடனான ஆலோசனைக் கூட்டம்நடத்தப்படுகிறது. கரூர் மாவட்டம் முழுவதும்குடிநீர்தொடர்பானபணிகளுக்கு முக்கியத்து வம் அளித்து அலுவலர்கள்பணியாற்றவேண்டும். இப்பணிகளின் முன்னேற்றம் குறித்து தொடர்ந்துகண்காணிக்கப்பட்டுவருகிறது.

இன்றைய தினம் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் மாநகராட்சி, நகராட்சிகள். பேரூராட்சிகள். ஊராட்சிஒன்றியங்கள்எனஅனைத்துப் பகுதிகளுக்கும் வழங்கப்பட்டு வரும் குடிநீரின் அளவு மற்றும் குடிநீரின் தேவைகள் குறித்து விரிவாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டு கரூர் மாவட்டம் முழுவதும் சீரான குடிநீர்

விநியோகம் வழங்கிடுவதை அலுவலர்கள் உறுதி செய்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நடைபெற்று வரும் குடிநீர் மேம்பாட்டு பணிகள் குறித்தும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. கூட்டு குடிநீர் திட்டம் செயல்படுத்தப்படும் பகுதிகளில் எவ்வித மின் தடையும் இல்லாமல்தொடர்ச்சியாகமின்சாரம்வழங்கப்படு வதை உறுதி செய்திடவும். குடிநீர் குழாய்களில் உடைப்புகள் ஏற்பட்டால்உடனுக்குடன்சரிசெய்திட வேண்டுமெனவும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதே போன்று. குடிநீர் குழாய் அமைக்கும்பணிகள்எதேனும்இருப்பின் அவற்றை போர்க்கால அடிப்படையில் விரைந்து சீரமைத்திடவும். மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி மற்றும்ஊராட்சிஒன்றியப்பகுதிகளில் பொதுமக்களின்அடிப்படைத்தேவைகளானசாலைவசதிகள். குடிநீர்வசதிகள். தெருவிளக்குவசதிகள். சுகாதார வசதிகள் உள்ளிட்ட பணிகள் நாள் தோறும் முறையாக நடைபெற்று வருகிறதா என்பது குறித்து தொடர்புடைய அலுவலர்கள் தினந்தோறும் ஆய்வுகளை தொடர்ச்சியாக மேற்கொண்டு பொதுமக்களுக்கு அடிப்படை வசதிகள் கிடைத்திடுவதை உறுதிசெய்திட வேண்டும்.

கரூர் மாவட்டத்தில் 4.5 ஆண்டுகளில் ரூ. 4.500 கோடி மதிப்பீட்டில் சாலை வசதிகள். குடிநீர் வசதிகள். தெரு விளக்கு வசதிகள். சுகாதார வசதிகள் உள்ளிட்ட உள்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளது. மேலும். கரூர்மாநகராட்சியில்ரூ.40 கோடி மதிப்பீட்டில் சாலை விரிவாக்க பணிகள் நடைபெற்றுள்ளதென வி. செந்தில்பாலாஜி தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள் இரா. மாணிக்கம் (குளித்தலை). ஆர். இளங்கோ (அரவக்குறிச்சி). க. சிவகாமசுந்தரி(கிருஷ்ணராயபுரம்). மாவட்ட வருவாய் அலுவலர் விமல்ராஜ். ஊரக வளர்ச்சி திட்ட இயக்குனர் மரு. வீரபத்திரன். மாநகராட்சி ஆணையர் சுதா மற்றும் அரசு அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

தாம்பரம் மாநகராட்சிக்கு உட்பட்ட வார்டு 32 கடப்பேரி பகுதியில் உள்ள ரேஷன் கடையில் , குடும்ப அட்டைதாரர்களுக்கு ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை, முழு கரும்பு, ரூபாய் 3000 ரொக்க பணம், வேட்டி, சேலை ஆகியவை அடங்கிய பொங்கல் பரிசு தொகுப்பினை மேயர் வசந்தகுமாரி கமலக்கண்ணன் வழங்கினார். உடன் 32 வது வட்ட கழக செயலாளர் இ.கமலக்கண்ணன் மற்றும் கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் பங்கேற்றனர்.